# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (27.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 272


# குடாநாட்டுக்கு அரசு அனுப்பிய கப்பலில் 1500 தொன் உணவுப் பொருள் மட்டுமே!

## அறிவிக்கப்பட்ட அளவில் அரைவாசியிலும் குறைவு!!

கொழும்பு, ஓகஸ்ட் 27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கென, கொழும்பிலிருந்து அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள றுகுணு கப்பலில் -

முன்னர் அறிவிக்கப்பட்ட 3,600 தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பதிலாக 1,500 தொன் மட்டுமே ஏற்றிவரப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷ் இதனை நேற்றிரவு உறுதி செய்தார். உணவுப் பொருள்கள் கொழும்பில் வைத்துக் கப்பலில் ஏற்றப்பட்டவேளை அங்கு நிலவிய காலநிலை சீரின்மையே பொருள்களை முழுமையாக ஏற்றமுடியாமைக்கான காரணம் என்றும் அவர் கூறினார்.

அறிவிக்கப்பட்ட அளவின் அரைவாசிக்கும் குறைவாக வந்து சேர்ந்துள்ள பொருள்கள் அனேகமாக ஒரு வாரத்துக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

கடந்த 11ஆம் திகதி அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடியான மோதல்கள் ஆரம்பித்ததை அடுத்து யாழ். குடாநாடு நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டது. பிரதான விநியோகப் பாதையான ஏ-9 வீதி மூடப்பட்டது. இதனால் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அங்கு அனுப்புவது தடைப்பட்டது. அவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு

(06 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலைக் குண்டுவெடிப்பில் நேற்று 6 இராணுவத்தினர் பலி!

யாழ்ப்பாணம், ஓக.27

முகமாலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் புதைத்து வைத்துவிட்டுச் சென்ற குண்டு வெடித்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது என்று இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்பில் காயமடைந்த மேலும் 11 பேர் உடனடியாக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அந்தப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே குண்டுவெடிப்பில் சிக்கிப் பலியாகினர்.

இதேவேளை, முகமாலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது விமானப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் பகுதியில் நேற்று 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஓக.27

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்று இரு இளைஞர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மல்லாகம், காளிகோயிலடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவசங்கர் (வயது 27) என்பவர் வீரபத்திரர் கோயிலடியில் வைத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இவரை வழிமறித்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டு இவரது மோட்டார் சைக்கிளையும் அபகரித்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைத்திருந்த பொலிஸ் நபரை 'விடுவித்தனர் புலிகள்

புலித்தேவனிடம் (வலது) கண்ணீருடன் விடைபெறும் பொலிஸார்.



கிளிநொச்சி,ஓக.27

தமது தடுப்புக்காவலில் இருந்த பொலிஸார் ஒருவரை விடுதலைப் புலிகள் நேற்று விடுவித்தனர். கண்காணிப்புக் குழுவின் விடைபெற்றுச் செல்லும் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனின் கோரிக்கையை அடுத்து நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் அவர் விடுவிக்கப்பட்டார்.

பி.டபிள்யூ. போபிற்றிகொட என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே விடுவிக்கப்பட்டவராவார். மன்னார் உயிலாங்குளத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த சமயம் கடந்த வருடம் ஒக்ரோபர்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் குடாநாட்டை விட்டு வெளியேற்றம்!

கொழும்பு, ஓக.27

யாழ்.குடாநாட்டை அசாதாரண சூழல் ஒன்று சூழ்ந்திருக்கையில் மக்கள் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் இங்கு பணியாற்றி வந்த சர்வதேச மற்றும் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் பல தமது பணிகளை இடைநிறுத்திக்கொண்டு வெளியேற ஆரம்பித்துள்ளன. இந்த நிறுவனங்கள் தொடர்ந்து செயற்படுவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததன் காரணத்தாலேயே அவை வெளியேறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஆறு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றுப் புறப்பட்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் புறப்பட்டுச் சென்றுவிட்டனர் என்று யாழ்.செயலக வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. நோர்வேஜிய அகதிகள் சபை (என்.ஆர்.சி), கரித்தாஸ், வேல்ட் விஷன், பார்க், டனிஷ் கண்ணி அகற்றும் நிறுவனம் ஆகிய சர்வதேச அமைப்புக்களும் சேவா லங்கா என்ற தேசிய அரச சார்பற்ற நிறுவனமுமே இவ்வாறு வெளியேறியுள்ளன.

இந்த நிறுவனங்களில் சில தமது அலுவலகப் பொருள்களை இராணுவத்தினரின் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளன. அவற்றின் பிரதிநிதிகள் அனைவரும் குடாநாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பணியாற்ற பாதுகாப்பு அமைச்சு தமக்கு அனுமதி வழங்காமையும் -

நிவாரணப் பொருள்கள் உட்பட உதவிப் பொருள்களைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையுமே -

தாம் வெளியேறுவதற்கான காரணம் என்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும் மீண்டும் இயல்பு நிலை ஒன்று ஏற்படும் பட்சத்தில் தாம் மீண்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## 'சேருவில' பயணிகள் கப்பலில் நேற்று 161 பேர் திருமலைக்கு!



கப்பலில் புறப்பட ஆயத்தமாக நிற்போர்.

யாழ்ப்பாணம்,ஓக.27

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து யாழ்.குடாநாடு துண்டிக்கப்பட்டதை அடுத்து இங்கு சிக்கிக் கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜைகள் 149 பேர் உட்பட161 பேர் நேற்று கப்பல் மூலம் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட 'சேருவில - 2' என்ற பயணிகள் கப்பலில் இவர்கள் அனைவரும் திருமலைக்குப் பயணமாகினர். பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து நேற்று மாலை 5.30 மணியளவில் கப்பல் புறப்பட்டது. இன்று பிற்பகல் அளவில் அது திருமலை சென்றடையும். (06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு,ஓக.27

மட்டக்களப்பு நகரப் பகுதியில் இருந்து நேற்று மாலை 5.45 மணிமுதல் 45 நிமிட நேரம் விடுதலைப் புலிகளின் பகுதி நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொம்மாந்துறை, வவுணதீவு, வாழைச்சேனை ஆகிய முகாம்களில் இருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

படையினர் மீது எந்த வித தாக்குதல்களையும் தாங்கள் நடத்தவில்லை என்றும் -

படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று மாடுகள் இறந்தன. வீரசிங்கம் பிருந்தா

(06 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவிலான ஆயுதங்கள் கட்டுநாயக்கா அருகே மீட்பு!

கொழும்பு, ஓக.27

கட்டுநாயக்கா விமான நிலையம் அருகே உள்ள பமுனுகம என்ற கரையோர நகரத்தில் படையினர் நேற்று நடத்திய தேடுதலில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அந்தப் பகுதியில் திடீர் தேடுதல் நடத்தப்பட்டது. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அங்கிருந்த வீடு ஒன்றில் இருந்து கிளைமோர் குண்டுகள்- 2, ரி-56 துப்பாக்கி- 1, கிரனேட்டுக்கள்-08, மகஸின்கள்- 2, ரி-56 துப்பாக்கி ரவைகள்- 115, வெடிக்க

(06 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தாக்குதலில் 2 பொதுமக்கள் பலி!

திருகோணமலை, ஓக.27

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் விமானப் படையின் கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின. இதில் இரு பொதுமக்கள் பலியாகினர்; மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

மூதூர் கிழக்கு, துறைமுகத்துவாரப் பகுதி மீதே விமானங்கள் குண்டு வீசின. அதே சமயம், நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் மூதூர் கிழக்கு நோக்கிப் படையினர் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்தினர்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. தேடுதலில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டனவா? உண்மையை விளக்கி பீடாதிபதிகள் கூட்டு அறிக்கை!

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 18ஆம் திகதி படையினர் தேடுதல் நடத்தினர். இதில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என ஊடகங்களில் செய்தி வெளியானது. அதனைப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் மறுத்திருந்தார். எனினும் தேசிய பாதுகாப்பு நடவடிக்கை மையம் பல்கலைக்கழகத்தில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என மீண்டும் தெரிவித்திருந்தது. இந்நிலையில் உண்மை நிலை என்ன என்பதை விளக்கிப் பல்கலைக் கழக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடாதிபதிகளும் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த இருவாரமாக யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையின் பின்னணியைப் பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்படுத்தி சில ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் உண்மைக்குப் புறம்பான பிரசாரம் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பீடாதிபதிகளாகிய நாம் உண்மை நிலையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இவ்வறிக்கையை வெளியிடுகின்றோம்.

கடந்த 11.08.2006ஆம் திகதி திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு 63 மணிநேரம் தொடர்ந்து அமுலில் இருந்தது. அச்சமயம் திருநெல்வேலியில் அமைந்துள்ள இரு மாணவர் விடுதிகளிலும் மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக்கழக விடுதியிலுமாக ஏறத்தாழ 350 மாணவ, மாணவிகள் தங்கியிருந்தனர். இவர்கள் ஊரங்கு வேளையில் உணவு, குடிதண்ணீர் விநியோகமின்றி சிரமப்பட்டனர்.

14.08.2006 திங்கட்கிழமை ஊரடங்கு உத்தரவு இரண்டரை மணிநேரம் நீக்கப்பட்டதும் இச் சிரமங்களை ஓரளவு நீக்கினோம். அன்று மதியம் பாலசிங்கம் விடுதியின் நுழைவாயில் படலைக்கருகில் ஒரு சில மாணவர்கள் கல்லாசனத்தில் இருந்து பேசிக்கொண்டிருந்த போது பி.ப 1.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த் இனந்தெரியாத இருவரால் மாணவர்களை நோக்கி கிரனேற் வீசப்பட்டது. தெய்வாதீனமாகப் பெரிய அனர்த்தம் ஏதும் ஏற்படவில்லை. மாணவர் ஒருவர் மட்டுமே காயத்திற்குள்ளானார். இது மாணவர் மத்தியில் பதற்றத்தை உருவாக்கியது.

மறுநாள் 15.08.2006 செவ்வாய்க்கிழமை பாலசிங்கம் விடுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவனொருவனும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த இன்னொரு மாணவனும் பல்கலைக்கழகத்தில் இருந்து அரைக்கிலோமீற்றர் தொலைவில் உள்ள வியாபார நிலையமொன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். இது மாணவர்கள் மத்தியில் மேலும் பெரும் பீதியை ஏற்படுத்தியது.

மாணவர்கள் பீதியைத் தணித்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக துணைவேந்தர், யாழ்.நீதிவான், யாழ்.அரச அதிபர் ஆகியோர் மாணவர்களைச் சந்தித்து உரையாடி நம்பிக்கையூட்டினர். பின்னர் விடுதிக்குள் ஏதோ வெடித்ததாகப் பரப்பப்பட்ட கதையைப் பொய்ப்பிக்க உண்மையில் கிரனேற் வெடித்த மதிற்கரையோர இடத்தை துணைவேந்தர், யாழ்.நீதிவான், யாழ்.அரச அதிபர் ஆகியோர் யாழ்ப்பாண இராணுவ பிரதம சிவில் இணைப்பாளரை அழைத்துச் சென்று காண்பித்து பரஸ்பர நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**படையினர் தேடுதல்**

கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பிரதான வளாகம் ஆண்கள் விடுதி, ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதி ஆகியனவும் அவற்றின் சுற்றாடலும் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. அச்செழு, யாழ்ப்பாணம், உடுவில் ஆகிய மூன்று பிரிக்கேட்டுகளைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரிகள், இராணுவத்தின் யாழ்.மாவட்டத்திற்கான பிரதம சிவில் இணைப்பதிகாரி ஆகியோரது பிரசன்னத்துடனும், வழிகாட்டுதல்களுடனும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸாரின் உதவியுடனும் பல நூறு இராணுவத்தினரால் பல்கலைக்கழக வளாகம் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

விடுதிகளில் தங்கியுள்ள ஏறத்தாழ இருநூற்று நாற்பது பெண் மாணவிகளும்,நூற்றிப்பத்து ஆண் மாணவர்களும் வீடியோ படமெடுக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர். இத்தேடுதலின் போது விடுதிகளில் மாணவரல்லாத வெளியார் எவருமோ அன்றி ஆட்சேபனைக்குரிய பொருள்கள் எவையுமோ காணப்படவில்லை.

பல்கலைக்கழக நிர்வாக தொகுதிக் கட்டடங்களும் பீடங்கள் அமைந்துள்ள கட்டடங்களும் அதன் சுற்றாடலும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. அதில் இரு மோப்ப நாய்களும் பங்குபற்றின. இத்தேடுதலின்போது பதில் துணைவேந்தரும் சமுகமளித்திருந்தார். பூட்டப்பட்ட சில அலுமாரிகள் சோதனையிடப்பட வேண்டுமெனக் கேட்டபோது அவற்றை உடைத்து சோதனையிட உபவேந்தர் அனுமதியளித்தார். இவ்விடங்களிலும் ஆட்சேபனைக்குரிய பொருட்கள் எவையும் காணப்படவில்லை.

**மாணவர் மையத்தில் சோதனை**

மாணவர் மையம் சோதனையிடப்பட்ட போது பதில் துணைவேந்தருடன் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா ஆகியோரும் கூட இருந்தனர். இச்சோதனையின் போது அம்மையத்தில் அமைந்துள்ள மாணவர் ஒன்றியத் தலைவரது காரியாலயத்தில் பகீரதன் என்ற கலைப்பீட மூன்றாம் வருட மாணவன் காணப்பட்டார். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் எதற்காக அவர் அங்கு வந்தார் என அவரை வினவியபோது அவர், அக்காரியாலயத்திலுள்ள தொலைபேசியை உபயோகிக்க முதல்நாள் வந்தார் எனவும் ஊரடங்கு வேளை அமுலாக முன்னர் தமது இருப்பிடத்திற்கு திரும்ப முடியாது போனதால் ஊரடங்கு அமுலான முதல் நாள் பிற்பகல் முதல் அங்கு தங்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறினார்.

அங்கிருந்த பொருள்கள் இராணுவத்தினரால் வீடியோபடம் எடுக்கப்பட்டன. மாணவர் ஒன்றியத்திற்கு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டிருந்த கணனி, தொலைபேசி போன்றவற்றையும், மாணவர் ஒன்றியத் தலைவரின் காரியாலய அலுமாரி ஒன்றிலிருந்த அச்சிடப்பட்ட பிரசுரங்களையும், படங்களையும், கடிதத்தலைப்புகளையும் தாங்கள் எடுத்துச் சென்று கோப்பாய் காவல் நிலையத்தில் கையளிக்கப் போகிறார் எனவும், பகீரதனையும் அக்காவல் நிலையத்தில் ஒப்படைக்கப் போகிறார் எனவும் அச்செழு பிரிக்கேட்டிற்குப் பொறுப்பான உயர் அதிகாரி பதில் உபவேந்தரிடம் கூறினார். மாலை ஐந்து மணியளவில் தேடுதல் நடவடிக்கை முற்றுப் பெற்றது.

அன்று மாலை பல்கலைக்கழகப் பாதுபாப்பு உத்தியோகத்தர்கள் தமது வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்திற்குச் சமீபமாக அமைக்கப்பட்டிருந்த உயிர்நீத்தோருக்கான நினைவுத்தூபி சேதப்படுத்தப்பட்டிருந்ததை அவதானித்தனர். இதனை மறுநாள் நாமும் காணக்கூடியதாக இருந்தது.

**மீண்டும் தேடுதல்**

தேடுதல் நடவடிக்கையின் போது எவ்வகையான வெடிபொருள்களோ அன்றி ஆயுதங்களோ வளாகத்திலோ அன்றி விடுதிகளிலோ கண்டெடுக்கப்படவில்லை. ஆயினும் சில செய்தி ஊடகங்களும் இணையத்தளங்களும் தேடுதலின் போது வளாகத்திலிருந்து வெடிபொருள்களும் ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டதாக உண்மைக்குப் புறம்பான செய்திகளை மறுநாள் சனிக்கிழமை வெளியிட்டிருந்தன. இச்செய்திகளைப் பதில் துணைவேந்தர் இருபதாம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றின் மூலம் மறுத்திருந்தார். அன்று பிற்பகல் நான்கரை மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தின் சில பகுதிகள் இராணுவத்தினரால் மீண்டும் தேடுதலுக்குட்படுத்தப்பட்டன. இத்தேடுதல் பற்றி இராணுவத்தினர் பதில் துணைவேந்தருக்கு அறிவிக்கவில்லை. பல்கலைக்கழக வளாகம் அமைந்துள்ள பகுதிக்குப் பொறுப்பான அச்செழு முகாம் பொறுப்பதிகாரியுடன் பதில் துணைவேந்தர் தொடர்பு கொண்டு வினவிய போது இத்தேடுதல் குறித்து தமக்கு எதுவுமே தெரியாதென அவர் கூறியுள்ளார்.

இச்சமயத்தில் கடமையிலிருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவரினதும் கூற்றுப்படி, பிரதான வளாகத்தின் ஒரு சில காரியாலயங்களும் கலையரங்கமும் அவற்றின் சுற்றாடலும் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன. தேடுதல் பிற்பகல் நான்கரை மணிமுதல் இரவு ஏழரை மணிவரை நடத்தப்பட்டது. தேடுதல் செய்தவர்களுடன் சென்றிருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமது காரியாலயத்திற்கு இரவு 6.45 மணிக்குத் திரும்பினர்.

அதன் பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் காரியாலயத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரைத் தமது மோட்டார் சைக்கிள்களில் தம்முடன் ஏற்றிச் சென்று, மாணவர் மையத்தின் பின்புறத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள மின்கம்பத்திற்கு அடியில் ஒன்றாகக் கட்டப்பட்டிருந்த ஐந்து கிரனேட்டுகளை மோட்டார் சைக்கிள் தலைவிளக்குகளினதும் ரோச் லைட்டினதும் வெளிச்சத்தின் உதவியுடன் காட்டி, தாம் அவற்றை மீட்டுள்ளனர் எனக் கூறி வீடியோப்படம் எடுத்த பின்னர் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

**சோடிக்கப்பட்ட கதையா?**

ஓகஸ்ட் பதினெட்டாம் திகதி தேடுதலின் போது எவ்வகையான வெடிமருந்துகளோ ஆயுதங்களோ காணப்படாதிருக்கக் கூடியதாக ஆயுதங்களும் வெடிபொருள்களும் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டதாக சில ஊடகங்கள் அறிவித்ததை பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே பல்கலைக்கழக சமூகம் கருதுகின்றது.

பதினெட்டாம் திகதி முழுநாளும் மோப்ப நாய்களின் உதவியுடனும் பதில் உபவேந்தரின் பிரசன்னத்துடன் செவ்வையாக நடத்தி முடிக்கப்பட்ட தேடுதலின் போது எதுவித ஆயுதங்களும் காணப்படாதிருக்க, இருபதாம் திகதி இருள் கவிந்த வேளையில் பதில் உபவேந்தரின் பிரசன்னம் இல்லாத நிலையில் மாணவர் மையத்திற்கு சமீபத்தில் மின்கம்பத்திற்கடியில் ஐந்து கிரனேட்டுகளை 'கண்டுபிடித்தல்' அரங்கேற்றப்பட்டுள்ளது.

இருபதாம் திகதி இருட்டு வேளையில் மாணவர் மையத்திற்கு சமீபமாகக் காணப்பட்டதாகக் கூறப்பட்ட ஐந்து கிரனேட்டுகளும் தேடுதல் நடத்தியவர்களால் கொண்டு வரப்பட்டு பின் எடுத்துச் செல்லப்பட்டதா என்ற நியாயமான ஐயத்தைப் பல்கலைக்கழக சமூகத்தவரிடையே ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற பல்கலைக்கழக சமூகத்தின் ஐயத்திற்கு இருபதாம் திகதிய நிகழ்வுகள் வலுவூட்டியுள்ளன. இந்நடவடிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பரஸ்பர நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவித்துள்ளது.

பதில் துணைவேந்தர் தனது செய்திக் குறிப்பில் கோடிட்டுக் காட்டியது போல இவ்வாறான் நடவடிக்கைகளும் நினைவுத் தூபிகளை நாசப்படுத்தல் போன்ற உணர்வுகளைத் தூண்டும் செயற்பாடுகளும் நல்லெண்ணத்தை வளர்த்து நல்லிணக்கமொன்றைக் காண உதவப் போவதில்லை. ஆகவே இவ்வாறான செயற்பாடுகளையிட்டு எமது கவலையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவதோடு இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களை விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓகஸ்ட் இருபதாம் திகதிய நிகழ்வுகளின் பின் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருமே அச்ச உணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். 1983 ஆம் ஆண்டு முதல் பல நல்ல கல்விமான்களின் சேவையை இழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த மூன்று ஆண்டுகளாக தனது ஆசிரியர்களின் பலத்தை அதிகரித்துக் கொள்வதில் சிறியளவில் தானும் வெற்றி கண்டிருந்தது. இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை மீண்டும் பல பயிற்றப்பட்ட இளம் ஆசிரியர்களைப் பல்கலைக்கழகம் இழக்கும் நிலையை உருவாக்கிவிட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# எம்.ஜி.ஆர். சிலைக்கு தார்பூச்சு!

கரவெட்டி, ஒக 27

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனின் நினைவாக வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டிருந்த அவரது சிலைக்கு இனந்தெரியாத சிலர் தார் பூசியுள்ளனர். வல்வை, ஆதிகோயிலடிச் சந்தியில் இந்தச் சிலை அமைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில், சிலையின் தலை, மார்பு பகுதிகளில் தார் பூசப்பட்டுள்ளது.

இந்தச் சிலை கடந்தவருடம் ஆதிகோயிலடி மக்களின் நிதியில் இந்தியச் சிற்பிகளால் உருவாக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்பு சிலையின் இரு கைகளினதும் விரல்கள் உடைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வல்லை ஆலடிச்சந்தியில் உள்ள வே.பிரபாகரன் அவர்களின் வீட்டு வாசலில் பொறிக்கப்பட்ட "மேன்மைதகு தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்" என்ற எழுத்துகளும் விசமிகளால் தார்பூசிச் சேதமாக்கப்பட்டது.

(ம-70)



தார்ப்பூச்சுக்கு இலக்கான எம்.ஜி. ராமச்சந்திரனின் உருவச்சிலை

# அம்பாறையில் போராளி மரணம்

அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் வீதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் போராளி ஒருவர் கொல்லப்பட்டார். பொலீஸார் இருவர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஓட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்த பொலீஸார் மீது இடம்பெற்ற தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்தப்பட்ட போது விடுதலைப் புலிகள் உறுப்பினர் உயிரிழந்தார் என்று திருக்கோவில் பொலீஸார் தெரிவித்தனர். ஆனால், உயிரிழந்த போராளி தமது அரசியல் துறையைச் சேர்ந்தவர் என்று அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயா தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் சுடர் என்ற 21 வயதுப் போராளியே உயிரிழந்தவராவார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமது அரசியல் துறை அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்த சமயம் அவர் விசேட அதிரடிப் படையினரால் சுடப்பட்டார் என்றும் ஜெயா மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் எம்.தர்மரத்ன (வயது 35), டபிள்யூ. அபேயரத்ன (வயது 33) ஆகிய பொலீஸாரே காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

# புதுக்கோட்டையில் கண்டனக் கூட்டம்

சென்னை, ஒக.27

முல்லைத்தீவில் மாணவிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகம், புதுக்கோட்டையில் தமிழர் கழகம் சார்பில் நேற்றுமுன்தினம் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத்தலைவர் கொளத்தூர் மணி, புதுக்கோட்டை பாவாணன், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் காளிமுத்து ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதேவேளை, முல்லைப் படுகொலைகளைக் கண்டித்து மலேசியாவிலும் 32 அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 2,000 பேருக்கு மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
### ADMISSION - 2007 FOR GRADE 1, GRADE 4 AND GRADE 6

*தரம் 1, தரம் 4, தரம் 6 இற்கான அனுமதி - 2007*

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2006 முதல் 15.09.2006 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எக்காரணம் கொண்டும் 15.09.2006இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண் ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 20.09.2006 புதன்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. பிழையாக நிரப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட்கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
6. வயதெல்லைகள்:
   அ. தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2001இற்கும் 31.01.2002 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1996இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ. தரம் 4 விண்ணப்பதாரி 01.02.1998இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருந்தல் வேண்டும்.
7. தரம்4, 6இற்கான பிரவேசப்பரீட்சை 14.10.2006, சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு: 1.தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியம் தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.
2. தரம் 12 (A/L 2009 Batch) இற்கு அனுமதிக்கான விண்ணப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். 01.02.1990இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

(சி/50901) அதிபர்கள்.



## மீண்டும் ஆரம்பம்

*அதே இடம்
*அதே தரம்
*அதே சேவை

**த மதர் அன்ட் சயில்ட்**
சுன்னாகம்
(நாகம்ஸ் சினிமா எதிரில்)


## தவறிவிட்டது

தம்பையா பத்மநாதன், பத்மாவதி பத்மநாதன் என்பவர்களுடைய பிரித்தானிய கடவுச் சீட்டுகள் (இல.035651475, 035654032) 25.08.2006 அன்று யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், 65/4, மருதடி வீதி, யாழ்ப்பாணம், அல்லது முருகன் மோட்டர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

மாரிமுத்து புஷ்பலதா என்பவருடைய தே.அ. போதிராஜா ஒழுங்கை, ஆட்டுப் பட்டித் தெரு, கொழும்பு 13 எனும் முகவரியுடைய (826212390V) தே.அ. அட்டையும், வங்கி அட்டையும் (HNB)சுதுமலை அம்மன் கோவிலுக்கும் TC லேனுக்கும் இடையில் 25.08.06 தவறிவிட்டன. கண்டெடுத்தவர் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.சன்மானம் வழங்கப்படும்.

பிறேம் நகை மாடம், மானிப்பாய்.

## PC HOUSE (Pvt) LTD

**Pc house (Pvt) Ltd** தனது யாழ்கிளை ஊழியர்கள் அனைவரையும் திங்கள் முதல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்துக்குள் கடமைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகாமையாளர்.
**Pc house (Pvt) Ltd, Jaffna.**


## Organ/Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான 220 சினிமாப் பாடல்களின் Notes, கேள்வி ஞானம் KeyBoard Exercise, Theory ஆகியன விற்பனைக் குண்டு.

**கரவீணா இசைமன்றம்**
*131, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
T.P.:0713055991,
*(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 M தெற்கே)*


## பாராட்டி வாழ்த்துகிறோம்



தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் 4ஆவது பேராயராக அபிஷேகம் பெற்ற

**பேரருட் கலாநிதி**
**டானியல் செல்வரத்தினம் தியாகராஜா**

அவர்களை தென்னிந்திய திருச்சபையின் வடக்கு, கிழக்கு, மலையக, தென்பகுதி மக்கள் அனைவரும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றனர்.

**திருச்சபை மக்கள்.**

## மரண அறிவித்தல்

### Dr.சதாசிவம் ஸ்ரீதரன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் KENT U.K. இல் வசித்தவருமான Dr.சதாசிவம் ஸ்ரீதரன் 23.08.2006 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் நேசரத்தினம் ஆகியோரின் மூத்த புதல்வனும் விமலா (சீப்சைட்) இன் அன்புக் கணவரும் லோகதர்ஷினி (லோஜி - Accountant), Dr. கஜனதர்சினி (கஜி), தவகணன், விமலன், ஸ்ரீதரன் (கணன் - Medical Student) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக (30.08.2006) வைக்கப்படும். (203, Willington Street, Maid Stone, KENT ME158EE). இறுதிக்கிரியைகள் நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகி 2.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக Maid Stone Bearsted Rd., Wearcring Vinters Park, Crematorium எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு இல.: 00441622693938 (சி/50921)

*தகவல்*
மனைவி, பிள்ளைகள்.


உங்கள் ஆரோக்கியமான அழகிய
# புன்னகையின்
இரகசியம்



☑ நேர்த்தியான கூந்தல் வளர்ச்சி
☑ பளபளப்பான மேனி
☑ உறுதியான பற்களும், எலும்புகளும்

பயோட்டின், விற்றமின்-E
மற்றும்
கல்சியம்

அனைத்து பாமசிகளிலும் கிடைக்கும்

*Once Daily*
**Biotex-EC**
**பயோடெக்ஸ் -EC**

உலக சுகாதார அமைப்பின் சிறந்த தயாரிப்பு செயன்முறைக்கான அங்கீகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள்

For further information, please contact:
Star Pharma
96/2-13, Consistory Building,
Front Street, Colombo-11.
Tel/Fax: 4613110, 2452127
E-mail: starprm@wow.lk

Manufactured in India by:
THE MADRAS PHARMACEUTICALS
137-B, Old Mahabalipram Road,
Karapakkam, Chennai - 600 096.

## BIOTEX -EC என்றால் என்ன?

BIOTEX-EC என்பது

- பயோட்டின் (விற்றமின்-H) USP 300 mcg
- விற்றமின் - E USP 20 mg
- கல்சியம் பென்டதனேட் USP 12.5 mg

ஆகியவற்றை உள்ளடக்கிய (Capsules) மாத்திரை.

BIOTEX - EC ல் உள்ள **பயோட்டின்** மனித உடலை போஷாக்குடன் வைத்திருக்க மிகவும் அத்தியாவசியமானது இது உடலை போஷாக்காக வைத்திருப்பதுடன தலைமயிர் நேர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் வளர்வதற்கும், தலைமயிர் உதிர்வதை தடுப்பதற்கும் உதவுகிறது.

BIOTEX - EC ல் உள்ள **விற்றமின்** E சருமம் மற்றும் நகம் என்பவற்றை ஆரோக்கியமாகவும் பளபளப்பாகவும் வைத்திருப்பதுடன் வயது முதிர்ச்சியான தோற்றத்தை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

BIOTEX - ECல் உள்ள **கல்சியம்** உடலின் உள்ள எலும்புகளையும் பற்களையும் வாழ்நாள் முழுவதும் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதுடன் ஒஸ்ரியோ புரோசிசை (Osteoporosis) தடுக்கிறது.

## BIOTEX-EC

☒ விரைவான தலைமயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
☒ ஆரோக்கியமற்ற தலைமயிர்களுக்கு பலமூட்டுகிறது.
☒ தலைமயிர் உதிர்வதையும், உடைவதையும் தவிர்க்கிறது.
☒ தலை மயிர் மெலிவதை கட்டுப்படுத்துகிறது.
☒ தலைமயிர் நரைத்தலை தடுக்கிறது.
☒ தலைமயிர் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிறது.
☒ பொடுகை (Dandruff) கட்டுபடுத்துகிறது.
☒ உலர்ந்த சருமத்தை செலுமையாக்குகிறது.
☒ வயது முதிர்ந்த தோற்றத்தை தவிர்க்கிறது.
☒ நகங்களை பளபளப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.
☒ எலும்புகளின் சக்தியையும் உறுதியையும் வாழ்நாள் முழுவதும் பேணுவதுடன் ஒஸ்ரியோ புரோசிசையும் (Osteoporosis) தடுக்கிறது.
☒ பற்களை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.

பாவனைமுறை: ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை மட்டும்.

உங்கள் ஆரோக்கியமான அழகிய புன்னகைக்கு
**பயோடெக்ஸ் -EC**
யாழ் மக்கள் பெற்றுக்கொள்ள
*VANIKAA MEDICALS*
No. 85, Hospital Road, Jaffna.
Tel: 021- 2226291 Fax: 021- 2222445


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை தேடுதலில்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மாணவர்கள் அச்சம்

மாணவர்கள் தம்மால் இவ்வாறான சூழ்நிலையில் கற்றற் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதென்கின்றனர். ஏறத்தாழ ஆயிரத்து நூற்றியைம்பது வெளிமாவட்ட மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றனர். இவர்கள் தமது பெற்றோர், பாதுகாவலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியாதுள்ளனர். அவர்களுள் ஏறத்தாழ முந்நூற்று ஐம்பது பேர் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ளனர். எண்ணூறு பேர் வரை பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்திலுள்ள தனியார் வீடுகளில் தங்கியுள்ளனர். சமீபத்திய நிகழ்வுகளால் இவர்கள் தமது பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதாகக் கருதுகின்றனர்.

ஓகஸ்ட் இருபதாம் திகதி பல்கலைக்கழகத்தில் நடந்தது போன்ற நிகழ்வுகள் விடுதிகளிலும் அரங்கேற்றப்பட்டு தாம் தொந்தரவுக்குட்படுத்தப்படலாம் அல்லது பலியிடப்படலாம் என அஞ்சுகின்றனர். விடுதிகளில் உள்ள மாணவர்கள் அனைவருமே வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இப்போது தமது இருப்பிடங்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது உணவுத் தேவைகளைப் பல்கலைக்கழகம் கடந்த இரு வாரங்களாகக் கவனித்து வருகின்றது. இதற்கு உதவிய நிறுவனங்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மாணவர் விடுதிகளை அகதி முகாம்கள்போற் பராமரிக்க வேண்டியுள்ளது.

தனியார் வீடுகளில் தங்கியுள்ள மாணவர்கள் அச்ச உணர்வுடன் வாழ்வதுடன் உணவுக்குப் பணமின்றியும் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு ஓரிருவாரங்களுக்கு தேவையான நிதியுதவியைச் செய்ய பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறாக ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைத் தொடர்ந்து பராமரிக்கப் பல்கலைக்கழகத்தால் முடியாது. மாணவர்களும் மனங் குழம்பிய நிலையில் தம்மால் இவ்வாறான சூழலில் கல்வி கற்க முடியாதெனவும் தம்மைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்து தருமாறும் வற்புறுத்திக் கேட்கின்றனர். ஆகவே, இம்மாணவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்க முன்னுரிமை தருமாறு யாழ். அரசாங்க அதிபரை பல்கலைக்கழக நிர்வாகம் வற்புறுத்திக் கேட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது பெரும் சொத்துக்களுள் ஒன்றாகக் கருதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டுமாயின் அங்கு வேண்டத்தகாத நடவடிக்கைகள் தவிர்க்கப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் தமது கல்விச்செயற்பாடுகளை அச்ச உணர்வின்றி முன்னெடுக்கக் கூடிய சூழல் நிலவுவதற்கு உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும்.

ஆகவே, இராணுவ முரண்பாடுகளுடன் பல்கலைக்கழகத்தைச் சம்பந்தப்படுத்தி பிரசார நோக்குடன் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளிப்படுத்தி பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கு களங்கத்தை எற்படுத்துவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டுமென்றும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முரண்பாட்டின் நடுவில் பல்கலைக்கழகத்தை நிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாது பல்கலைக்கழகம் தனது பணிகளை முன்னெடுக்க உதவ வேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம். - என்றுள்ளது.


## ஓரிருட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117


## கண்ணீர் அஞ்சலி



எமது செயலாளரும் முன்னாள் உபதலைவரும் சமூகத் தொண்டனுமாகிய

**சுப்பிரமணியம் பசுபதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

சைவவித்தியாவிருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தலைவர்,
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
இல்லப்பிள்ளைகள், பணியாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவன ஆங்கில ஆசிரியர் திரு.சுப்பிரமணியம் பசுபதி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எலைற்கல்வி நிறுவனம்,
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மக்கள் வங்கியின் கண்ணீர் அஞ்சலிகள்



எமது வங்கியின் மிக நெருங்கிய தொடர்பாளனும் எம் இனிய நண்பரும், வலி.வடக்கு வாழ் மக்களின் தொண்டனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பல்லாண்டு காலத் தலைவரும், சிறந்த கூட்டுறவாளருமாகிய

மாமனிதர்

**சின்னத்தம்பி சிவமகாராசா**

அவர்களின் மறைவு எமக்கு மாறாத்துயராகியது. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

முகாமையாளரும் சக ஊழியர்களும்
மக்கள் வங்கி, சுன்னாகம்.

# சைவ வித்தியாவிருத்திச் சங்க பொதுச் செயலாளர் காலமானார்

யாழ்ப்பாணம்,ஓக.27

சமூக சேவையாளரும் கல்வித் திணைக்களத்தின் முன்னாள் அலுவலருமான சு.பசுபதி நேற்றுக் காலமானார்.

இவர் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பொதுச் செயலாளராக கடந்த மூன்று வருடங்களாகப் பணியாற்றினார்.

குடாநாட்டில் பரவலாக சைவச் சிறுவர் இல்லங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் நிறுவுநர் 'இந்துபோர்ட்' இராசரத்தினத்தின் அபிலாஷைகளில் ஒன்றாகும். அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இணுவிலில் சைவச் சிறுவர் இல்லக் கட்டடத்தை அமைப்பதில் அமரர் பசுபதி பெரும் பங்களித்தார்.

இவர் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமாவார். இறக்கும்போது இவருக்கு வயது 70. அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறும்.


## C.B. COMPUTER ACADEMY

(Station Road Kondavil, Tel 021 4590291)

எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தினமும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் பயிற்சி வகுப்புகளை [Pratical Classes] மேற்கொள்ள முடியும்.
(மேலதிக விவரங்கள் நேரில்)

பணிப்பாளர்.

## BARATHY

சித்தங்கேணி

மாணவர் கவனத்திற்கு

**சகல வகுப்புகளும் நாளை (28.08.2006) திங்களன்று ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: ஊரடங்கு நேரம் தளர்த்தப்பட்டவுடன் புதிய நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


## மரண அறிவித்தல்



## திருமதி றூகலா ஈஸ்வரன்

*மண்ணில் மலர்வு : 03.03.1961*
*விண்ணிற்கு விரைவு : 22.08.2006*

ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதி "சிவசுந்தரவாசா"வைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றூகலா ஈஸ்வரன் அவர்கள் 22.08.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா - மனோகரி தம்பதிகளின் அன்பு மகளும், ஈஸ்வரனின் பாசமிகு மனைவியும், சயந்தனின் (Australia) அன்புத் தாயாரும், வத்சலா (U.K), சசிகலா (Australia), நிசாகரன் (U.K), வைசாகரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலேந்திரன், காலஞ்சென்ற தனலக்ஷ்மி (U.K), சத்தியலக்ஷ்மி (U.S.A), சந்திரன், சீதாலக்ஷ்மி (Norway), ராதா (U.K), ரமணன் (Australia), தாரணி (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (27.08.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
Veluvanarama Flats,
Wellawatta.
T.P: 2365478.

தகவல்:
கணவர் - ஈஸ்வரன்,
மகன் - சயந்தன்.

# மரண அறிவித்தல்கள்

## *சிதம்பரப்பிள்ளை சிவசங்கர் (சங்கர்)*

(சங்கர் இரும்புத் தொழிலக உரிமையாளர்)

சிதம்பரப்பிள்ளை சிவசங்கர் நேற்று (26.08.2006) சனிக்கிழமை அகால மரணமனார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை வசந்தமல்லிகாவின் சிரேஷ்ட புத்திரனும் சிவசலோனி (பல்கலைக்கழக கலைப்பீடம், 3ஆம் வருடம்), சிவலயனின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2006) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## *நாகலிங்கம் பசுபதிப்பிள்ளை இராசையா*



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், அனலைதீவையும் நல்லூரையும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நா.ப.இராசையா அவர்கள் 16.08.2006 புதன்கிழமை நல்லூரில் சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் இலம்போதரநாதன் (லண்டன்), இராஜலிங்கம் (சிட்னி), காலஞ்சென்ற கமலாதேவி, விமலாதேவி (நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி (லண்டன்), ஜெயதர்சினி (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமனாரும் முரளி, சங்கர், சிவகாமி (லண்டன்), சேந்தன், குகன் (சிட்னி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை (உருத்திரபுரம்), செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பமணி தம்பிதுரை, கனகசபை, தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.08.2006 வியாழக்கிழமை நல்லூரில் நடைபெற்றன. எங்கள் துயரத்தில் பங்குகொண்டு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

*290/14, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

மனைவி,
பிள்ளைகள்.

## *கனகர் சின்னத்துரை*



இல.219/4, கனகசபை ஒழுங்கை, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கனகர் சின்னத்துரை நேற்று (26.08.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாபதி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் பாக்கியராசா (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி), சறோஜனி (கிளிநொச்சி), சாந்தினி, சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தாதேவி (ஜேர்மனி), நவனகுமார் (கச்சேரி - கிளிநொச்சி), விஜயமேகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் நிஷாந், மிதுஷர், திவ்யா, துவாரகன், அபிரா, ஆரதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நீண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவநேசன் (மகன்)
*துவாரகன் கொமினிகேசன், கலட்டி, யாழ்ப்பாணம்.*

## *சுப்பிரமணியம் பசுபதி (ஜே.பி.)*

**(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், யாழ். கல்வி வலயம், முன்னாள் தலைவர் - நல்லூர் ப.நோ.கூ .சங்கம், செயலாளர் - திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கம், செயலாளர் - திருநெல்வேலி சிவகாமி அம்மன் ஆலயம்)**



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பசுபதி அவர்கள் நேற்று (26.08.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் -.சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா - அமிர்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வில்வராணியின் அன்புக் கணவரும் பாலகுமரன் (மோகன் மாஸ்ரர் - தனியார் கல்வி நிலையம்,கோண்டாவில்), பாலரஞ்சன், பாலமுரளிதரன் (ஆசிரியர் - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), பாலமுகுந்தன் (ஆசிரியர் - கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இரஞ்சினிதேவி (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) மற்றும் ஜெந்தி, காயத்திரி (ஆசிரியை - முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), சசிகலா (ஆசிரியை - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், சதுர்சன், ஆதிரையன், ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேரனும், பராசக்தி, திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் மகேஸ்வரி, இரத்தினரஜா, வில்வராஜா, இரத்தினராணி, யோகராணி ஆகியோரின் மைத்துனரும், தெய்வேந்திரனின் மாமனும், சிவநேசன், சிவபாலன், சிவசக்தி, சிவமலர் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2006) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். (ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தால் தளர்த்திய இரண்டுமணித்தியாலத்தின் பின்)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 0212227013* (53365)

தகவல்:
பாலகுமரன்
*(மகன் - மோகன் மாஸ்ரர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## அமைச்சுப் பதவிகள் பெற உதவிய 'அகன்ற தமிழ்க்கூட்டமைப்பு' கோஷம்

நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்ட விடயம் கொழும்பு அரசியலில் அரங்கேறியிருக்கின்றது. 'என்றும் அரசுப் பக்கம்' என்ற தனது பாட்டனாரின் 'பல்டி' கொள்கையை நியாயவாதமாக முன்வைத்துக்கொண்டு, மீண்டும் ஒருமுறை அணி தாவியிருக்கின்றார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குப் பின்னால் அணி திரள மலையக இளைஞர்களும் தயார் என்று சமாதான காலத்தில் ஈழத் தமிழர் பிரதேசத்தில் வந்து முழக்கம் இட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனையும் இழுத்துக்கொண்டு, இந்த யுத்தம் வெடிக்கப் போகும் சூழ்நிலையில் அரசுக்குள் - அமைச்சரவைக்குள் - புகுந்துகொண்டதுதான் ஆறுமுகனாரின் புதிய சாதனை.

வழமைபோல, 'அடிக்கும் பல்டிகளுக்கு அமைச்சர் பதவி இனாம்' என்ற தென்னிலங்கையின் கீழ்தர ஜனநாயக அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைய அணித் தாவல் அரங்கேறியிருக்கின்றது.

அமைச்சுப் பதவி என்ற எலும்புத் துண்டுகளுக்காக அணி மாறுவோர் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதால், புதுப் புது பெயர்களில் எலும்புத் துண்டுகளை தயார் பண்ண வேண்டிய இக்கட்டு அரசுத் தலைவருக்கு.

மொத்தம் இரண்டு அமைச்சுப் பதவிகள், மூன்று பிரதி அமைச்சுப் பதவிகள் - எட்டு எம்.பிக்களுடன் அணி மாறிய 'ஆறுமுகனார் - சந்திரசேகரன் அண்ட் கோ' வுக்குக் கிடைத்துள்ளன.

ஆறுமுகனார் அணியில் எலும்புத் துண்டு கிடைக்காத செல்லச்சாமி, புத்திரசிகாமணி, ஜெகதீஸ்வரன் ஆகியோர் அரசுத் தரப்போடு நின்று பிடிப்பார்களா அல்லது தங்களுக்கு அமைச்சுப் பதவி தராமல் ஒதுக்கப்பட்ட ஆதங்கத்தில் அணி தாவாமல் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்ந்துவிடுவார்களா என்பது இன்னும் தெரியவில்லை.

ஆனால், மிக முக்கியமான ஓர் அரசியல் கால கட்டத்தில் இந்த அணித் தாவல் முடிவை ஆறுமுகன் - சந்திரசேகர் கூட்டணி எடுத்திருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்து, ஈழத் தமிழர் தரப்போடு முற்றாக முரண்பட்டு, நிலைமை மோசமடைவதற்கு முன்னர் இ.தொ.காவிலிருந்து தனி ஆளாக, பிரதி அமைச்சர் பதவி ஒன்றையும் ஏற்றுக்கொண்டு, பாய்ந்தார் வடிவேல் சுரேஷ்.

அப்போது அதை கடுமையாக விமர்சித்த ஆறுமுகனார் அணி, இப்போது ஈழத் தமிழர் தரப்புக்கும் தென்னிலங்கை அரசுக்கும் இடையில் பகையுறவும் விரோதப் போக்கும் உச்சக் கட்டத்தை அடைந்து, பிரகடனப்படுத்தப்படாத போர் ஒன்று கட்டவிழ்ந்த சூழ்நிலையில் அந்த அரசின் கையை வலுப்படுத்தும் விதத்தில் 'பல்டி' அடித்திருக்கின்றது.

அரசின் பங்காளியாக மாறுவதன் காரணமாக அரசின் செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் கூட்டுப் பொறுப்பு ஏற்க வேண்டிய கடப்பாடு இப்போது அரசுப் பக்கம் தாவியிருப்போருக்கும் ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத விடயம்.

இந்தக் குத்துக் கரணத்துக்கு ஆறுமுகன் - சந்திரசேகரன் அணி பல காரணங்களை - விளக்கங்களை - நியாயங்களை முன்வைக்கக் கூடும். தம் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதுதானே அரசியல் வாதிகளின் வேலை?

*✱ பெரும் யுத்தம் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்த யுத்த வெறிப் போக்கிலிருந்தும் பௌத்த - சிங்கள தீவிர வாதிகளின் பிடியிலிருந்தும் அரசை விடுவிக்கவே அரசுடன் இணைந்தோம்.*

*✱ எமது மக்களுக்குச் சேவையாற்ற அரசில் இணைவதுதான் ஒரேவழி என்பதால் சேர்ந்தோம். அதுவும் கொடூர யுத்தம் ஒன்று வெடிக்கப் போகும் சூழ்நிலையில் எமது மலையக மக்களுக்கு, நாம் உரிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதாயின் அதற்கு ஒரே மார்க்கம் அரசில் சேர்வதுதான்.*

*✱ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரித்ததன் மூலம் வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களை தமிழர் தாயக மக்கள் கைவிட்டுவிட்டனர். வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் மக்களை மஹிந்தவின் அரசின் பிடிக்குள் சிக்கவைக்க வாய்ப்பளித்தவர்களே வடக்கு - கிழக்கு தமிழர்கள்தாம். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் புறக்கணித்து, எமது மக்களை இக்கட்டில் மாட்டிவிட்ட நிலையில் எங்களது மக்களுக்காக ராஜபக்ஷ அரசுடன் சேர்ந்து பணியாற்றுவதைத் தவிர எமக்கு வேறு வழியேதும் இல்லை.*

- இப்படியெல்லாம் இ.தொ.கா. - மலையக மக்கள் முன்னணி கூட்டணி பல விளக்கங்களை - வியாக்கியானங்களை - முன்வைக்கக்கூடும்.

ஆனால், அவை நியாயமானவையா, ஏற்கத் தக்கவையா என்பதை தமிழ் மக்களும், இனி அரசியல் வானில் நிகழப் போகும் சம்பவங்களும் நகர்வுகளும்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால், அமைச்சுப் பதவி தருவதற்கு அரச உயர்பீடம் பின்னடித்து, இ.தொ.கா. தலைவர்களின் ஊழல் கோப்புகளை தூசிதட்டி தூக்கி எடுத்தபோது -

'அகன்ற தமிழ்க் கூட்டமைப்பு' என்ற கோஷத்தோடு இ.தொ.காவினர் கிளிநொச்சிக்கு காவடி எடுத்ததை வடக்கு - கிழக்கு தமிழர்களோ அல்லது மலையகத் தமிழர்களோ சுலபமாக மறந்துவிட மாட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்தோடு தமிழ் அமைப்புக்கள், கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்குவோம் என்ற அம்சத்தை பேரமாக வைத்து இந்த அமைச்சுப் பதவிகள் சுவீகரிக்கப்பட்டிருக்குமானால் அது பெருந்தவறு. குறுகிய அரசியல் சுயலாபங்களை எட்டுவதற்கு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதாகவும் தமிழ்ப் போராளிகளை அரசியல் வஞ்சக நோக்கில் ஏமாற்றியதாகவுமே அது அர்த்தப்படும்.

இந்த அரசியல் குத்துக்கரணத்தை எப்படி அர்த்தப்படுத்திக்கொள்வது என்பதை இனிவரும் நிகழ்வுகள், சம்பவங்கள் எமக்கு புலப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

ஆறுமுகன் - சந்திரசேகரன் அணியினரிடம் இறுதியாக ஒரு கேள்வி.

'அகன்ற தமிழ்க் கூட்டமைப்பு' என்ற உங்கள் ஆரவாரம் என்னவாயிற்று? அமைச்சுப் பதவிகள் கிட்டியதும் அவற்றைக் குப்பைக் கூடைக்குள் வீசியாகிவிட்டதா? பதிலறியத் தமிழர்கள் மெத்தவும் ஆர்வமாக இருக்கின்றார்கள்.

# வடமராட்சிக் கரையோரம் மீனவர்கள் படகுகள் நிறுத்தப் படையினர் தடை

### 200 மீற்றருக்கு அப்புறப்படுத்த கடும் உத்தரவு

கரவெட்டி,ஓக.27

வடமராட்சி கரையோர மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகள், வலைகள், இழுவை இயந்திரங்கள் என்பவற்றைக் கடற்கரையில் வைக்க இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பருத்தித்துறை முனை, சுப்பர் மடம், இன்பருட்டி, சக்கோட்டை, திக்கம், பொலிகண்டி, ஊறணி, வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, மயிலியதனை, கெருடாவில், தொண்டைமானாறு ஆகிய கரையோரப் பகுதிகளில் இந்தத் தடை கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அவர்களது மீன்பிடி உபகரணங்கள், பிளாஸ்டிக் படகுகள், வலைகள், இழுவை இயந்திரங்கள் என எவையும் கடற்கரையில் இருக்கக் கூடாது எனக் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை - பருத்தித்துறை பிரதான வீதிக்கு அப்பால் சுமார் 200 மீற்றர் தொலைவிற்கு அனைத்துப் பொருள்களும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமெனக் கரையோர இராணுவத்தினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர் எனக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தடை உத்தரவைத் தொடர்ந்து அனைத்து கடற்றொழில் உபகரணங்களும் மீனவர்களால் பெருஞ் சிரமத்துடன் கடற்கரையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கடற்கரையோர மக்களுக்கென அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்த மலசல கூடங்களை அப்பகுதி மக்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் இராணுவத்தினர் பணித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் மேற்படி கரையோரப் பிரதேசங்களும் தமது குடியிருப்புகளும் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக்கப்படுவதன் ஒரு பகுதியோ என மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ம-70)

## வெளி இடங்களுக்கு தபால்களை எடுத்துச் செல்வதற்கு முயற்சி!

யாழ்ப்பாணம்,ஓக.27

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு தபால்களை எடுத்துச் செல்வதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி நாடப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கான தபால்களோ வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான தபால்களோ பரிமாறப்படவில்லை. இங்கு தேங்கிக் கிடக்கும் தபால்களை வெளியிடங்களுக்கு அனுப்ப தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் போக்குவரத்தில் ஈடுபடும் கப்பல்கள் மூலம் தபால் பொதிகளை தெற்கே அனுப்பும் முயற்சிகளை தபாலக வட்டாரங்கள் மேற்கொண்டுள்ளன.

வெளியூர்களுக்கு அனுப்ப வேண்டிய தபால்களை மக்கள் உடனடியாக தபாலகங்களில் சேர்த்தால் விரைவில் அவை சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, அவசர மனிதாபிமான உதவித் தேவைகளை நிறைவேற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் தபால்களை எடுத்துச் செல்வது குறித்தும் பரிசீலிக்கும் என்று குழுவின் யாழ்.அதிகாரி ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ம-1)

## கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை ஊரடங்கு நீக்கப்பட்டு ஒரு மணி நேரத்தில் கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என பதிவாளர் வை.வைத்தியகுமார் தெரிவித்தார்.

குறிப்பிட்ட தினத்தில் பெறாதவர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கியிலேயே கொடுப்பனவைப் பெறவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-1)

## மறு அறிவித்தல்வரை பயணிகள் விமான சேவை இடம்பெறமாட்டாது

கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தனியார் பயணிகள் விமான சேவை மறு அறிவித்தல்வரை இடம்பெற மாட்டாது என 'எக்ஸ்போ' நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாளை முதல் விமான சேவை இடம்பெறும் என வெளிவந்துள்ள தகவல்களை மறுத்துள்ள அந்நிறுவன யாழ். அலுவலகம், பாதுகாப்பு காரணங்களுக்காக இச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் -

சேவை ஆரம்பிக்கப்படும் போது ஊடகங்கள் ஊடாக அறிவிக்கப்படும் என்றும் - தெரிவித்தது. (ம-1)

## ம.தி.மு.கவை தடை செய்ய காங்கிரஸ் கட்சி கோருமாம்

### வைகோ மீது இரு தினங்களில் நடவடிக்கை

சென்னை,ஓக.27

தமிழ்நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசியல் கட்சியென்ற நிலையிலிருந்து நீக்கி தடை செய்யும் படி தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினர் கோருவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சி பிரமுகர் ஒருவர் இத் தகவலை லண்டன் பி.பி.சி. நிருபருக்கு கூறியுள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோவும் ஏனையவர்களும் இந்திய இறையாண்மைக்கு மாறாக பேசி வருகிறார்கள். இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் பேசுகிறார்கள். இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்காக மாம்பழம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம். வைகோவின் பேச்சு முழுவதையும் பொலிஸார் பதிவு செய்து வைத்துள்ளார்கள். வைகோ மீதும் மற்றவர்கள் மீதும் பொலிஸார் இரண்டு மூன்று தினங்களுக்குள் வழக்குத் தொடர்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் தெரிவித்தனர்.

ம.தி.மு.க. ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளமையால் அதன் மீது தடை விதிக்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், ஈழத் தமிழர்களின் நிலை குறித்து இந்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தலைநகர் புதுடில்லியிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக வைகோ அறிவித்துள்ளார்.

வைகோ மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## பல்கலை. மாணவர்களைக் காப்பாற்ற அவசர நடவடிக்கை எடுத்து உதவுக

### சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கஜேந்திரன் எம்.பி.கடிதம்

கொழும்பு,ஓக.27

பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சோடிப்பதில் இலங்கை இராணுவத்தினர் சதிசெய்து வருகிறார்கள். விடுதிகளில் தங்கியுள்ளவர்களின் கொலைகளை நியாயப்படுத்துவதற்காக மாணவர்களைத் தீவிரவாதிகளாக வெளிப்படுத்த முயற்சி செய்கிறார்கள். எனவே ஆபத்தில் சிக்கியுள்ள அனைத்து மாணவர்களையும் காப்பாற்றுவதற்கு உடனடியாக - பொருத்தமான நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கும் அவசர வேண்டுகோள் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமைகள் குறித்து கஜேந்திரன் எம்.பி. தமது கடிதத்தில் விரிவாக விளக்கியுள்ளார்.

"தற்போதைய மோதல் சூழ்நிலையைப் பயன்படுத்தி மாணவர் தலைவர்களை அழித்தொழிப்பதற்கு இலங்கைப் படையினர் முயற்சி செய்கிறார்கள். சர்வதேச சமூகத்தில் இம்மாணவர்கள் தொடர்பாக தவறான கருத்துக்களை உருவாக்க படைகளும் பாதுகாப்பு அமைச்சும் முயன்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் புதிய தலைவர் கைதுசெய்யப்பட்ட சூழ்நிலையையும் அவர் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு விளக்கியுள்ளார். (ப)

## நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் கொழும்பு செல்லமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஓக.27

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.குடாநாட்டுப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்பு செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் இன்றி பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் 15 பேர் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான விவரங்கள் யாழ்.செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் உரியவர்கள் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கு எவ்வாறு செல்வதெனத் தெரியாது பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளனர். (ம-68)

## புற்று நோயாளர்களுக்கு யாழ்.ஆஸ்பத்திரியில் மருந்து சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஓக.27

குடாநாட்டில் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் தமது மருத்துவ ரீதியான தேவைகளுக்காக இன்று முதல் யாழ்.போதனா வைத்தியசாலையின் 26ஆம் வார்ட்டுக்கு சமூகமளிக்கலாம் எனப் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் என். ஜெயக்குமாரன் தெரிவித்தார். உடனடியாக மருந்து சிகிச்சை மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த இவர் போக்குவரத்து வசதி இல்லாததால் யாழ்ப்பாணம் திரும்ப முடியாத நிலையில் சிக்கிக்கொண்டிருந்தார். திருமலையில் இருந்து நேற்று யாழ்.வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பயணிகள் கப்பல் மூலம் அவர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

புற்றுநோய்க்கான மருந்து சிகிச்சை யாழ்.வைத்தியசாலையில் உடனடியாக இன்று ஆரம்பமாகின்றது என்றும் -

கதிர்வீச்சுச் சிகிச்சையை தெல்லிப்பழையில் நடத்துவது குறித்து சம்பந்தப்பட்ட[illegible] ஆலோசிக்கவுள்ளார் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ம-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

கொழும்பு,ஓக.27

வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உணவு கொண்டுசெல்வதற்கான வழியை அரசு மூடியுள்ளதால் அங்கு உணவுத் தட்டுப்பாடு உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி எச்சரித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பான உலக உணவுத் திட்டம் (W.F.O).

அந்த அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜெக் டக்பீக் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விவரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் எரிபொருள்களின் விலை மூன்று தொடக்கம் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. குழாய் மூலமான தண்ணீர் விநியோகம் நாளொன்றுக்கு நான்கு மணி நேரமே நடைபெறுகின்றது.

2004ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இதுவரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

போக்குவரத்துக்கள் துண்டிககப்பட்டிருப்பதால் அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்து இருப்பவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் நிவாரண உதவிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் அனுமதித்தால், வன்னிப் பிரதேசத்தில் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள உலக உணவு அமைப்பு அதிகாரிகள் தங்கள் சொந்தப் பாதுகாப்புடன் செல்லத் தயாராக இருக்கின்றனர்.

அரசுக்கும் ஐ.நா.சபைப் பிரதிநிதிகளுக்கும் இடையே அரச கட்டுப்பாடில்லாத பிரதேசத்தில் நிலவும் மனிதாபிமானத் தேவைகள் குறித்து உயர் நிலைப் பேச்சுக்கள் நடைபெற்ற போதும் தீர்க்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்று வதிவிடப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உணவுப் பொருள்களை வழங்கி வந்துள்ளது என்றும் -

பாதை தடைப்பட்டதால் அந்த அமைப்பால் வன்னிக்கு உணவு வகைகளை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (1)

## பாடசாலை உடைத்து சத்துணவுகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.27

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடாசலை உடைக்கப்பட்டு அங்கிருந்த சத்துணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களின் சத்துணவுத் திட்டத்திற்கென வைக்கப்பட்டிருந்த அரிசி, பயறு, உழுந்து, சீனி போன்ற பொருள்கள் பல மூடைகள் களவு போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஊரடங்கு சட்ட நேரத்தினை திருடர் கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இத் திருட்டை மேற்கொண்டுள்ளனர்.

(ம- 68)

## வன்னிக்கு 38 லொறிகளில் நேற்று உணவுப் பொருள்கள்

வவுனியா,ஓக.27

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு இரு வாரங்களின் பின் நேற்று 38 லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் இதனை நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

கொழும்பில் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய அவர் நேற்று வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார். இதனை அடுத்து அரசின் அனுமதியுடன் கிளிநொச்சிக்கு 23 லொறிகளிலும், முல்லைத்தீவுக்கு 15 லொறிகளிலும் உணவுப் பொருள்கள் ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இன்று மேலும் பத்து லொறிகளில் பொருள்கள் அங்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளன என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் -

பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைத்தவுடன் அவை எடுத்துச் செல்லப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

தற்சமயம் எடுத்துச் செல்லப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் வன்னி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானவை இல்லை என்றும் -

மேலும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (ம-1)

## கொழும்பின் பாதுகாப்பு ராணுவத்திடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஓக 27

ஸ்ரீலங்காத் தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு இராணுவத்தினர் அடங்கிய விஷேட அணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தல், நடவடிக்கைகளை மேற்கொள்ளல் புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்தல் ஆகிய அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக - கூட்டு நடவடிக்கைகள் பணிப்பாளராக - மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கூட்டு நடவடிக்கைகளுக்கான பணிப்பாளராக கடந்த வியாழக்கிழமை முதல் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கொழும்பிற்குத் தொடர்ச்சியாக அச்சுறுத்தல் நிலவி வருவதனால் கொழும்பின் பாதுகாப்பினை இராணுவத்தினர் வசம் ஒப்படைக்க வேண்டி ஏற்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்ணான்டாவின் தலைமையில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கொழும்பின் மூத்த காவல்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இனிமேல் கொழும்பு நகரில் நடைபெறும் தேடுதல்கள், சுற்றிவளைப்புகள், புலனாய்வுத் தகவல்கள் சேகரித்தல், வாகனங்களைச் சோதனையிடுதல் உட்பட அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்ணான்டோவின் ஆலோசனையின் பேரிலேயே நடை பெறும்.

அதேநேரம், கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி காவல்துறை மாஅதிபர் ஏ.இலங்ககோன் மற்றும் பிரதி மாஅதிபரான பூஜித ஜயசுந்தர ஆகியோரின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. அவர்கள் தலைமையில் விஷேட பொலீஸ் அணியும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்பிற்காக மேலும் ஆயிரம் காவல்துறையினர் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன், மேலதிக இராணுவத்தினரையும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் விரைவில் தொடங்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குடாநாட்டுக்கு அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது.

இதனை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் உணவுப் பொருள்கள்அடங்கிய கப்பல் ஒன்றை அனுப்ப அரசு நடவடிக்கை எடுத்தது. குடாநாட்டில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டு 10 நாள்களின் பின்னர் ஒருவாறு தெற்கில் இருந்து றுகுணு கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட்டது.

இந்தக் கப்பலில் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான 5 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் அனுப்பப்படும் என்று அரசு முதலில் அறிவித்தது. ஆனால், கப்பல் புறப்பட்ட சமயத்தில் அதில் 3,800 மெற்றிக் தொன் பொருள்கள் அனுப்பப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டதை ஜனாதிபதியே நேரில் சென்று பார்வையிட்டார். கப்பலில் 3,800 தொன் பொருள்கள் வடக்கே அனுப்பப்படுகின்றன என்று அமைச்சர்களை மேற்கோள்காட்டி அரச ஊடகங்கள் தொடர்ச்சியாகப் பறைசாற்றி வந்தன.

ஆனால், நேற்றுமுன்தினம் பருத்தித்துறையை சென்றடைந்துள்ள றுகுணு கப்பலில் வெறும் 1,500 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மட்டுமே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தற்போது பொருள்களை இறக்கும் பணி முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றது. ஒரு நாளைக்கு 400 மெற்றிக்தொன் என்ற அடிப்படையில் பொருள்கள் இறக்கப்படுகின்றன என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் நேற்று சனிக்கிழமை, பயணிகள் கப்பல் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட காரணத்தால் பொருள்கள் இறக்கும் பணி இடம்பெறவில்லை.

இதற்கிடையே யாழ். குடாநாட்டில் உள்ள மக்களுக்கு ஒரு மாதத்திற்கு சுமார் 5 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவை. தற்போது வந்துள்ள அளவு யாழ்ப்பாணத்தின் ஒரு வாரத் தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், கப்பலில் வந்துள்ள உணவுப் பொருள்கள் எவ்வளவு காலத்திற்குப் போதுமானது என்ற கவலை அதிகாரிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அடுத்தடுத்து உணவுக் கப்பல்கள் வருவதற்கான அறிகுறிகளும் தென்படாத நிலையில் அனுப்பப்பட்ட கப்பலிலும் அறிவிக்கப்பட்டதிலும் குறைந்த அளவான பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன என்பது பொது மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ம-1-68)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை கிபிர் விமானங்கள் நேற்றுக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

முகமாலையில் புதிய பங்கர்களை அமைத்து தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று அதன் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதற்கிடையே, மட்டக்களப்பு மாவடி வேம்பு என்ற இடத்தில் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது என்று இராணுவம் தெரிவித்தது. நேற்றுமுன்தினம் 1.30 மணியளவில் இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டது. அன்று மாலை 5.10 மணியளவில் மாவடி வேம்பு முன்னணி இராணுவ அவதானிப்பு நிலை மீது புலிகள் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர் என்றும் அது தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவில் வவுணதீவில் உள்ளபடையினர் நிலை மீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் படையினர் ஆட்டிலறி மற்றும் மோட்டர்கள் மூலம் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ம)

பெற்றுக் கொள்ளலாம்
நடைபெற்று முடிந்த G.I.T வினா விடைத் தொகுப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டு தப்பிவிட்டனர்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று மாலை சுன்னாகம் - புன்னாலைக் கட்டுவன் வீதியில், பொலிஸ் நிலையத்துக்கு சமீபமாக இடம்பெற்ற மற்றொரு சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரது விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை.சடலம் அந்த இடத்திலேயே கிடக்கிறது. இன்று ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வார் என்று தெரிகிறது. (ம-1)

## பெருமளவிலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் கருவிகள்- 4 மற்றும் 20 மீற்றர் நீளமான வயர் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 17 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச் சோலை என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் விசாரணைகளுக்காகத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் கடந்த பல வருடங்களாக - சுமார் 15 வருடங்களுக்கு மேலாக - கொழும்பிற்கு வெளியே வசித்து வந்துள்ளனர் என்றும் மிகப் பெரிய தாக்குதல் திட்டம் ஒன்றுக்கு அவர்கள் தயாராகி வந்துள்ளனர் என்றும் பொலீஸ் அதிகாரியான எஸ்.ஏ. ஜீவ கஸ்டா தெரிவித்தார்.

பமுனுகம பொலீஸார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 10) என்ற சிறுமி காயமடைந்தார் என்றும் -

மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

வவுணதீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் -

பதிலுக்குப் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர் என்றும் - பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது. (1)

## தடுத்து வைத்திரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் இவர் உட்ப மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டிருந்தனர். இரு வேறு சந்தர்ப்பங்களில் அவர்களில் இருவர் விடுவிக்கப் பட்ட னர்.

கடந்த 10 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த போபிற்றிகொட நேற்று. புலி களின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனால், விடை பெற்றுச் செல்லும் கண் காணிப்புக் குழுத் தலைவரிடம் கையளிக் கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் நடந்த சந்திப்பில் கண்காணிப்புக் குழுத்தலைவர் குறித்த பொலிஸாரை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். (ம)

## சேருவில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் யாழ்.சிங்கள மகாவித்தியாலயப் பகுதிக்கு அழைக்கப்பட்ட பயணிகள் அங்கு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 149 பேர் வெளிநாட்டவர்களும், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற யாழ். வாசிகளுமாவர். இருவர் அரச அதிகாரிகள். நால்வர் நோயாளர்கள், ஏனைய நால்வர் மரணச்சடங்குகளுக்காக கொழும்பு செல்பவர்கள்.

சோதனைகள் முடிந்து பிற்பகலில் பஸ்கள் மூலம் அவர்கள் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் கப்பலில் ஏற்றப்பட்டனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் இருந்து தேவைகள் நிமிர்த்தம் வெளியிடங்களுக்குச் செல்ல 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொண்டு விட்டுக் காத்திருக்கின்றனர். எனினும் 'சேருவில - 2' கப்பல் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்படுமா என்று இப்போது உறுதிபட எதனையும் தெரிவிக்க முடியாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ம-68)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் யாழ்ப்பாணம் வந்து பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் செஞ் சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவை தொடர்ந்தும் யாழ். குடாநாட்டில் பணியாற்றும்.

இதற்கிடையே, யாழ். குடாநாட்டில் பணியாற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் தற்போது தமது பணிகளைத் தொடர்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org